REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
ஐந்தாம் ஆண்டு மலர்
சென்ற ஆண்டினும் சிறப்பாக
15-6-57 அன்று வெளிவருகிறது
★
விவரங்கள் அடுத்து?

மலர் 4] சென்னை: வைகாசி 26௳ சனி (8—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 27௳ ஞாயிறு (9—6—57) [இதழ் 308

இலங்கைத் தமிழருக்கு சிங்கள வெறியர் இழைக்கும் அநீதி

கம்யூனிஸ்டுகளுக்கும் உடன்பாடானதே

நியாயவான்களாக நடித்தோரின் குட்டு அம்பலம்

'சுதந்திரன்' தரும் தகவல்

இலங்கை கம்யூனிஸ்டு கட்சியினர், இலங்கைவாழ் தமிழர்களுக்கு நியாயம் வழங்க பாடுபடுவதாகவும், இதர சிங்கள வெறியர்களோடு கம்யூனிஸ்டுகளையும் சேர்த்துப் பேசக்கூடாது என்றும், இங்குள்ள கம்யூனிஸ்டுகள் கூறிவருகின்றனர் அல்லவா? அந்தக் கூற்று பொய்யானது என்பதையும், இலங்கைவாழ் தமிழர்களுக்கு சிங்கள வெறியர்கள் இழைக்கும் அநீதிகள் அங்குள்ள கம்யூனிஸ்டுகளுக்கும் உடன்பாடானவைதான் என்பதையும் கூறும் செய்தி ஒன்றினை இலங்கையிலிருந்து வெளிவரும் 'சுதந்திரன்' 2—6—57-ந் தேதி இதழில் வெளியிட்டிருக்கிறது. அதனை அப்படியே கீழே தருகிறோம்:—

"நீண்ட காலமாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினர் செய்துவந்த புரளி இப்போது சந்தேகத்திற்கிடமின்றி அம்பலமாகிவிட்டது. இவர்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேசிவந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் குட்டும் வெளிப்பட்டுவிட்டது."

"இலங்கையில் தொடர்ந்தேர்ச்சியாக ஐந்து வருடங்கள் வரை வாழ்ந்து வருபவர்களுக்கு (பெரும்பாலும் மலைநாட்டுத் தமிழர்) பிரஜா உரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை உரிமைகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென்றும் அதற்காகப் போராடியும் வருகிறது தமிழரசுக் கட்சி. இந்த உண்மையை நாடு அறியும்."

"இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினர் இந்தப் பெருமையைத் தங்கள் தலையில் தாமே எடுத்துப் போட்டுக்கொண்டு பலகாலமாகத் தம்பட்டமடித்து வந்திருக்கிறார்கள். ஆனால் கடந்த மாதம் 23-ந் தேதி பாராளு மன்றப் பொறுக்குக் கமிட்டிக் கூட்டத்தில் நிகழ்ந்த சம்பவம் இவர்களது உண்மையான நிலையைத் தெளிவுபடுத்தியது."

'இலங்கையில் தொடர்ந்தேர்ச்சியாக ஐந்து வருடங்கள் வரை வாழ்ந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்று கோரித் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரஸ்தாப கூட்டத்தில் கொண்டு வந்த திருத்தப் பிரேரணையைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவரான திரு. பீட்டர் கெனமன் அரசாங்கக் கட்சி உறுப்பினர்களோடு சேர்ந்து, எதிர்த்து வாக்களித்துத் தோற்கடித்தார். இதற்குமேல் இது விஷயத்தில் இவர்களுடைய கொள்கைக்கு வேறு விளக்கம் வேண்டுமா?"

"நிலைமை இப்படியிருக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தமிழ்த் தினசரியான "ஜனசக்தி" 21—5—57ல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறது."

உதவி வேண்டுமானால்

கூட்டுறவு சங்கத்தில் சேரவும்

புதுடில்லி, ஜுன் 7—

கூட்டுறவு சங்கங்களில் சேராமல் வெளியே இருக்கும் எந்த கைத்தறி நெசவாளரைப்பற்றியும் எனக்கும் அக்கறை இல்லை."

"அரசாங்கம் சொன்னபடி அவர்கள் நடக்காவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது," என்று கண்டித்து மத்திய வர்த்தக அமைச்சர் தேசாய் ஏற்றுமதி ஆலோசனை குழுவில் தெரிவித்துள்ளார்.

நேருவின் இடத்திற்குக் காமராசர்!

லோகியா கருத்து

ஐதராபாத், ஜுன் 7—

நேருவின் இடத்திற்கு—பிரதமர் பதவிக்குக் காமராசர்!

ஆச்சரியமாயிருக்கிறதா?

இப்படி ஒரு கருத்து வெளியிட்டிருக்கிறார் சோஷலிஸ்டுத் தலைவர் டாக்டர் லோகியா!

"நேருவின் பிரதமர் பதவிக்கு வர காங்கிரசிலேயே மிகத் தகுதி வாய்ந்தவர் சென்னை முதன் மந்திரி காமராசர்தான்"

என்று லோகியா கருதுகிறாராம்.

"காமராசர், காங்கிரசில் நேருவுக்குத்தான் அடுத்தபடியானவர்; ஏனெனில், அவரது விஷயங்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல், ஆங்கில வாடை வீசாத ஒன்று. தனது கட்சியையும் சர்க்காரையும் எதிர்நோக்கும் கஷ்டங்களைச் சமாளிப்பதில் வேறெந்த காங்கிரசாரையும்விட காமராசருக்குத்தான் நன்றாகத் தெரியும். அவரது அறிவுத்திறன் ஆங்கிலத்தால் கறைபடுத்தப்படாத ஒன்று"

என்றும் லோகியா கூறியிருக்கிறார்.

அதிகாரிகளின் சம்பளத்திற்கு உச்சவரம்பு

கேரள சர்க்கார் நிர்ணயிக்கிறது

திருவனந்தபுரம், ஜுன் 7—

சர்க்கார் அதிகாரிகளுக்குத் தரும் சம்பளத்திற்கு கேரள சர்க்கார் ஒரு உச்ச வரம்பு நிர்ணயித்திருக்கிறார்கள்.

மாதம் 1,000 ரூபாய்க்கு அதிகமாக எந்த அதிகாரிக்கும் சம்பளம் தரப்பட மாட்டாது என்று வரம்பு கட்டியிருக்கிறார்கள்.

தனித் தொழில் நுணுக்க அறிவும் ஆற்றலும் தேவைப்படும் சில உத்தியோகங்களுக்கு மட்டும் சற்று அதிகமான சம்பளம் தரப்படலாம் என்றாலும் உச்சவரம்பு விதி எல்லோருக்கும் பொருந்தக் கூடியதே என்று கேரள நிதி மந்திரி கூறியிருக்கிறார்.

அதே நேரத்தில் நர்சுகளின் சம்பள விகிதத்தை சென்னை மாநில நர்சுகளுக்குத் தரப்படும் சம்பள அளவுக்கு உயர்த்தவும், போலீசாரின் கிராக்கிப்படியை உயர்த்தவும் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

ஆவடியில் புதிய தொழிற்சாலை

சென்னை, ஜுன் 8—

சைக்கிள், மோட்டார் சைக்கிள், டிரான்ஸ் பார்மர், பாய்லர், கன்வேயர்கள் முதலியவைகளுக்கு பயன்படும் 'ட்ரூ—வெல்' எக்கு குழாய்கள் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலை ஆவடியில் நிறுவப்பட்டுள்ளது.

இங்கு ஆண்டுக்கு 120 இலட்சம் அடி குழாய் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்நியச் செலாவணி பெரிதும் குறையுமாம்.

தந்திக் கட்டண உயர்வு!

பத்திரிகைத் தந்திகள் நீங்கலாகலான இதர உள்நாட்டுத் தந்திகள் விஷயத்தில், நிதி மந்திரி மக்கள் சபையில் அறிவித்த திருத்தப்பட்ட கட்டண விகிதங்கள், 1957 ஜுன் 9-ந் தேதி நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வருகின்றன. திருத்தியமைக்கப்பட்ட கட்டண விகிதங்களின்படி எட்டு வார்த்தைகளும், அதற்குக் குறைவான வார்த்தைகளும் அடங்கிய தந்தியொன்றுக்குக் குறைந்த பட்ச கட்டண இப்போதுள்ளது போலவே இருந்து வரும்; அதாவது சாதாரண தந்திகளுக்கு 80 புதிய காசும் 'எக்ஸ்பிரஸ்' தந்திகளுக்கு 160 புதிய காசும் கட்டணமாக வசூலிக்கப்படும். ஆனால் 8 வார்த்தைகளுக்கு மேற்பட்ட வார்த்தை ஒவ்வொன்றுக்கும் கட்டண விகிதம், சாதாரண தந்திகளுக்கு 7 காசாக இருந்துவருவது 8 காசாகவும் 'எக்ஸ்பிரஸ்' தந்திகள் விஷயத்தில் 14 காசாக ஆக இருந்துவருவது 16 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தளங்கள்

நிர்வாக மாற்றத்திற்கு உடன்பாடு

நஷ்டஈடாக இலங்கை ரூ.2 கோடி வழங்குமாம்

கொழும்பு, ஜுன் 7—

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தளங்களை, இலங்கை சர்க்கார் வரும் நவம்பர் முதல் தேதியன்று கைப்பற்றிக் கோள்வர் என்று தெரிகிறது.

இதற்காக, நஷ்டஈடுபோல பிரிட்டனுக்கு இலங்கை சர்க்கார் ஐந்தாண்டுகளில் ரூ. 2·2 கோடி வழங்குவர் என்றும் கூறப்படுகிறது.

தளங்களின் நிர்வாக மாற்றம் பற்றிய உடன்பாடு குறித்து இருநாட்டு சர்க்கார்களும் நடத்திய கடிதப் போக்குவரத்துக்குப் பிறகு கூட்டாக விடுத்துள்ள அறிக்கை இந்தத் தகவலைத் தந்துள்ளது.

பிரிட்டன், தனது பிடிப்புகளை மூன்றாண்டுகளுக்குள் கைவிட்டுவிடும் என்றாலும், ஐந்தாண்டு காலம்வரை சில வசதிகள் மட்டும் இலங்கை சர்க்காரிடமிருந்து பெற்று வருமாம்.

கேரளத்திற்கு வீண் செலவு

பண்டித நேருவின் பெயரால் ரூ.1,02,016 பாழ்!

திருவனந்தபுரம், ஜுன் 8—

பொதுமக்களுடைய வரிப் பணம் பல வழிகளில் வீணாக்கப்படுவதற்கு சான்றாக, பண்டித நேரு கேரளம் வந்தபோது செலவிடப்பட்ட பணத்தின் புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளது.

பொதுத் தேர்தலின்போது காங்கிரசுக்கு மக்கள் ஆதரவை தேட பண்டித நேரு பல மாநிலங்களையும் சுற்றி வந்தது தெரிந்ததே. கேரள மாநிலத்தில் காங்கிரசுக்கு ஆதரவு தேடி பண்டிதநேரு வந்திருந்த போது ரூபாய் 1,02,016 அரசாங்கம் செலவிட்டுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் காங்கிரஸ் கமிட்டி ரூ. 2000 மட்டும் ஏற்றுக் கொணடுள்ளதாம். உணவு வகையிலும், இருக்க வசதி செய்த வகையிலுமே இந்த 2000 ரூபாய் செலவை காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக் கொண்டுள்ளதாம்.

ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள யந்திரங்கள்

புதுடில்லி, ஜுன் 6—

கிழக்கு ஜெர்மனியில் இருந்து துணி தயாரிப்பு சம்பந்தமான இயந்திரங்கள் இறக்குமதி செய்ய, இறக்குமதி ஆலோசனைக் குழுவில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டுள்ளது என்று, தொழில் வர்த்தக இலாகா கூட்டுச் செயலாளர் லால் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. வில் சீனு!

முயற்சி தோல்வி

ஐ. நா. வில் சீனு அங்கம் பெறச் செய்வதற்கான மற்றொரு முயற்சியும் தோல்வி யடைந்துவிட்டது

நடைபெற்ற வல்லரசுகள் மகாநாட்டில் ஐ.நா.வில்சீனுவைசேர்த்துக்கொள்வது பற்றி ஆராயப்பட்டுள்ளது. இந்த பிரச்சினையை அமெரிக்கா, தள்ளிப் போட வேண்டும் என்று கொண்டுவந்த திருத்தம் நிறைவேறியுள்ளது.

அமெரிக்காவுக்கு ஆதரவாக 11 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் கிடைத்துள்ளன. 10 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லையாம்.

இதில் குறிப்பிடத் தக்கது 'பிரிட்டன் அமெரிக்காவுக்கு எதிராக வாக்களித்துள்ளதுள்ளதாகும்.

'நியூஸ் பிரிண்ட்' என வழங்கப்படும் செய்தித் தாள் அச்சடிக்கும் காகிதத்தின் இறக்குமதி அளவை கூட்டவோ குறைக்கவோ அரசாங்கம் கருதவில்லை என்று மத்திய வர்த்தக அமைச்சர் தேசாய் தெரிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 8—6—57 சனி

ஆகஸ்ட் அறப்போர் நான்கு கோரிக்கைகள்

இலங்கை வாழ் தமிழர்களின் சார்பில் வாதிட உரிமை கொண்டுள்ள பெடரல் கட்சி, அடுத்த ஆகஸ்டு மாதம், இலங்கை ஆட்சியினரை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட இருக்கின்றது. வன்முறையிலிருந்து விலகி, அமைதியான முறையில் அந்த நேரடி நடவடிக்கை இருக்கக்கூடும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

இலங்கை ஆட்சிக்கு எதிராக தான் மேற்கொள்ள இருக்கும் அமைதியான நேரடி நடவடிக்கைக்கு முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டியது பெடரல் கட்சியாகாது. அக்கட்சி நடத்த இருக்கும் நேரடி நடவடிக்கைக்கு முழுவதும் பொறுப்பேற்க வேண்டியது ஆட்சிபீடத்திலிருக்கும் இலங்கை கலவைக் கட்சியே யாகும்.

இலங்கையை ஆண்டுவரும் ஏக் சத் பெருமுன கட்சிக்கு முன்னோடியாக இருந்துவருவது பிரதமர் பண்டார நாயகாவைத் தலைவராகக் கொண்டு இயங்கிவரும் இலங்கை சுதந்திரக் கட்சியே யாகும். ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமையை மேற்கொள்ள, தமிழ் மக்கள் கட்சியான பெடரல் கட்சியை விரட்டியுள்ள பெருமை நூற்றுக்கு நூறும் பண்டாவின் சொந்தக் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியையே சார்ந்திருக்கின்றது என்பது மிகையன்று.

ஆகஸ்டு திங்களில் தாம் துவங்க இருக்கும் ஒத்துழையாமை இயக்கத்திற்கு நான்கு காரணங்களை பெடரல் கட்சி குறிப்பிட்டுள்ளது. சிங்கள மொழிக்கு மட்டுமே ஆட்சிமொழிநிலை அளித்து சட்டம் செய்துவிட்டு, தமிழ் மொழியை ஒதுக்கித் தள்ளிவிட பண்டா ஆட்சி முன் வந்திருப்பதே முதல் காரணமாகும்.

இம் மொழி ஒதுக்கல் விளைவாக இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் வாழ்வு இருண்டுவிடும் என்பதில் ஐயமில்லை. அந்த அளவுடனும் அதன் கேடு நின்றுவிடாது. தமிழர்களின் வாழ்க்கைத் துறைகள் அனைத்தும் அதனால் கேடுறும் என்பது முக்காலும் உண்மை.

தனது வாழ்க்கை வழியான தாய் மொழியை விற்றுவிட எந்த சமூகமும் விரும்பாது. தாய் மொழியை ஈடுகாட்டி, ஒரு சமூகம் தனது வாழ்க்கையில் ஏற்றம் பெறுவது என்பது, தன் கண்களை விலையாகக் கொடுத்து சித்திரம் வாங்கத் துணியும் விபரீதம் போன்றதே யாகும்.

தமிழ் மொழிக்கு உலை வைப்பதின் மூலம், இலங்கைத் தமிழ் இனத்தின் எதிர்கால நலனைப் பறித்துவிட பண்டாரநாயகா திட்டமிட்டுவிட்டார் என்பது பெடரல் கட்சியின் திடநம்பிக்கை. பண்டாவின் சிங்கள மொழி மோகமும், பெடரல் கட்சியின் மேற்படி நம்பிக்கையை உறுதி செய்வதாக இருக்கிறது.

மொழியை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் சிறுபான்மையினராக இருந்துவரும் தமிழ் மக்களுக்கும், பெரும்பான்மையினராக உள்ள சிங்களவர்களுக்கும் பகை தோன்றி இருக்கின்றது. அப்பகையை உருவாக்கி, மேலும் வலுப்படுத்திவரும் புனிதப் பணியில் பண்டா ஈடுபட்டு வருகின்றார்.

பெரும்பான்மையினரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் சிறுபான்மையினரின் கடமை; அதுவே மக்களாட்சி மாண்புமாகும் என போதிக்க அரசியல் பண்டிதர்கள் முன்வரக்கூடும். பெரும்பான்மையினராக இருக்கின்றனர் என்ற காரணத்திற்காக, ஆட்சிபீடமேறிகள் சிறுபான்மையினரின் நியாயமான அடிப்படை உரிமைகளை மறுக்க முனைவதும், சிறுபான்மையினரை அடக்குமுறை கொண்டு ஒடுக்கப் பார்ப்பதும், சிறந்த மக்களாட்சி மாண்பாகாது என்பதையும் அந்தப் பண்டிதர்கள் ஒப்புக்கொண்டாகவேண்டும்.

ஒரே மொழி அடிப்படையில் இலங்கை மக்களை ஒன்று திரட்ட சிங்களத்தை ஆட்சி மொழியாக்கினர் பண்டா என நியாயம் பேசுவோர் சிலருண்டு. அதை உண்மையானது என்றே ஒப்புக் கொள்ளுவதானாலும், பண்டாவின் ஒற்றுமை முயற்சி, நீராடப் போய் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாக முடிந்தது. அதாவது தமிழ் மக்கள் மீது சிங்களவர்களை ஏவிவிடும் தீவினையாக, பண்டாவின் சிங்கள மொழித் திணிப்பு முடிந்திருக்கின்றது.

பண்டாவின் தமிழ் மொழி ஒதுக்கல், சிங்களவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏற்கனவே இருந்துவந்த நல்லுறவிற்குக் கேடு சூழும் அளவுடனும் இருந்துவிடவில்லை. கூட்டாட்சியின்கீழ், இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்தார்ப்போல் பெரும்பான்மையினராக இருந்துவரும் பகுதிகளுக்குத் தன்னாட்சி கோரும் கட்டத்திலும் வந்து முடிந்தது.

மூன்றாவது கோரிக்கையாக இலங்கையில் வாழ்ந்துவரும் இந்தியத் தமிழ் மரபினர் அனைவரையும் இலங்கை குடி மக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், பெடரல் கட்சி கோருகிறது.

இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில், வலுக்கட்டாயமாக சிங்களவர்களைக் குடியேற்றி வரும் செயலையும் உடனடியாக பண்டா தவிர்க்க வேண்டும் என்பது, பெடரல் கட்சியின் நான்காவது கோரிக்கையாகும்.

மேற்குறிப்பிட்ட நான்கு கோரிக்கைகளும் நூற்றுக்கு நூறும் நியாயமானது என்பதை நடுநிலையாளர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டே தீருவர். ஆனால், பண்டாவோ ஒருக்காலும் ஒப்புக் கொள்ளப் போவது கிடையாது.

உலக அமைதிக்காக பாகாக உருகும் பண்டாவின் உள்ளம், உள்நாட்டின் அமைதிக்காக உருகுவதாகக் காணோம். இவை இரண்டும் சில ஆட்சித் தலைவர்களிடம் முரண்பட்டுக் காணப்படுவது போன்றே, இலங்கைப் பிரதமர் பண்டாவிடமும் காணப்படுகிறது. இம்முரண்பாடு அதிகாரத்தின் விசித்திர விளையாட்டு போலும்!

பழங்களை அழுகாமல் பாதுகாக்க

200 சிறு பக்குவச் சாலைகள்

புதுடில்லி, ஜூன் 5—

நாட்டில் பழங்களை அழுகாமல் பாதுகாப்பதை அபிவிருத்தி செய்வதற்கு 200 சிறு பக்குவச்சாலைகளை ஏற்படுத்துவதற்குக் கடன் அளிக்க இந்திய சர்க்காரினால் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இக்கடனானது யூனிட் ஒன்றுக்கு அதிக பட்சம் 10,000 - ரூபாய் என்ற விகிதத்தில் இப் பண்ணைகளுக்குக் கிடைக்கும் என்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ள சர்க்கார் அறிக்கை மூலம் தெரிகிறது. பழம், காய்கறி உற்பத்தி செய்யும் பிரதான பிரதேசங்களான குலு பள்ளத்தாக்கு (பஞ்சாப்), வடமேற்கு வங்காளம், பீஹார், குடகு (மைசூர்), மேற்கு ஒரிஸ்ஸா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய இடங்களில் ஐந்து பெரிய பழப் பாதுகாப்பு யூனிட்டுகளுக்கு அதிகப்படியாக 35 இலட்சம் ரூபாய் கிடைக்கும். கடன் உதவி யூனிட்டு ஒன்றுக்கு 7 இலட்சம் ரூபாய் வரை அளிக்கப்படும்.

தற்பொழுதுள்ள பழப் பாதுகாப்புத் தொழிற்சாலைகளும் தங்கள் உற்பத்தியை விஸ்தரிப்பதற்கு தக்க கடன்கள் பெறலாம்.

ராஜ்ய சர்க்கார்கள் மூலம் கிடைக்கச் செய்யப்படவிருக்கும் இந்தக் கடன்கள், இரண்டாவது திட்டத்தில் தீவிர பழப் பாதுகாப்பு அபிவிருத்திக்கான திட்டத்தின்கீழ் சாங்ஷன் செய்யப்படும்.

நியாயவிலைக்கு அரிசி

வியாபாரிகளைக் கட்டுப்படுத்தச் சட்டம்

ஒரு பிரதேசத்தில் கடந்த மூன்று மாதங்களில் நிலவிய சராசரி விலைக்கு அரிசி மற்றும் நெல் ஆகிய உணவுப் பொருள்களை விற்குமாறு சர்க்கார் எந்த ஒரு வியாபாரியையும் கட்டுப்படுத்தலாம் என்று கூறும் அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் திருத்தம் ஒன்று இந்தியா முழுமையிலுமாக அமுலாகிறது.

இந்தத் திருத்தப்பட்ட சட்டம் ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு உள்ளிட்ட எல்லா மாநிலங்களிலும் அமுலாகும் என்று தெரிய வருகிறது.

மின்சாரக் குறைப்பு உத்திரவு நீக்கப்பட்டது

சென்னை, ஜூன் 6—

சென்னை மாநிலத்தில் மின்சாரம் பயன்படுத்துவதில் விதிக்கப்பட்டிருந்த எல்லாவித வெட்டுக்களையும் ரத்து செய்து அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. தொழிற்துறைகளுக்கு 25குதிரை விசைக்கு அதிகமான மின்சார அளவு புதிதாகவோ அல்லது அதிகப்படியாகவோ இணைக்கப்படலாகாதென்ற தடையும் நீக்கப்பட்டுள்ளது. இந்த உத்திரவு 25—5—57 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

சென்னை அரசாங்க 'பஸ்' சர்வீசின் கன்னியாகுமரிக் கிளையில் இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் 76 'பஸ்'கள் ஓடினவென்றும், அவை மூலம் ரூ. 2,23,771 வசூலானதென்றும அரசாங்க செய்தித் துறை அறிவிக்கிறது.

சினிமா உற்பத்தியாளர் மீது பாய்ச்சல்

ஏராளமான செலவில் கச்சா பிலிம் இறக்குமதிக்குக் கண்டனம்

புதுடில்லி, ஜூன் 6—

இந்தியாவில் சினிமாப்பட உற்பத்தியாளர்கள் அதிகமான அளவுக்கு பிலிம் சுருள்களை இறக்குமதி செய்வதாகவும், தயாரித்து வெளியிடும் படங்களின் நீளத்தைப்போல பல மடங்கு கச்சா பிலிம் இறக்குமதி செய்து நாட்டின் அன்னியச் செலாவணியைக் கரைப்பதாகவும் இறக்குமதி ஆலோசனைக் கவுன்சிலில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

படங்களும் அசாதாரணமான அளவுக்கு நீளமாக இருப்பதாகவும் படங்கள் ஒவ்வொன்றும் 10,000 அடிக்கு அதிகமாக ஏன் இருக்க வேண்டும் என்று குழுவில் கேட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கச்சா பிலிம்கள் மிக அதிகம் விலை கொடுத்து இறக்குமதி செய்யப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

ரூ. 3 கட்டணம் செலுத்தினால் தூங்கும் வசதி!

மூன்றாம் வகுப்பு பிரயாணிகளுக்கு

புதுடில்லி, ஜூன் 5—

இந்திய ரயில்வேக்கள், மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்காகத் தூங்குவதற்கும் உட்காருவதற்கும் வசதியுள்ள புதிய ரக இரண்டு தட்டுள்ள ரயில் பெட்டிகளைச் சீக்கிரமே உபயோகத்துக்குக் கொண்டுவர முடிவு செய்திருக்கின்றனவாம்.

இந்த ரக ரயில்பெட்டிகளில் கீழ்ப் பலகைகளில் உட்காருவதற்கு இடமிருக்கும்; மேல் பலகைகளில் மாத்திரம்தான் தூங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்குமாம்.

இப்போது, அனேக மார்க்கங்களில் தூங்கும் வசதியுள்ள ரயில் பெட்டிகள் (மூன்று தட்டுகள் கொண்டவை) விடப்பட்டு வருகின்றன.

எந்த ரகப் பெட்டிகளை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டு, அதன் பிரகாரம் எதிர்காலத் திட்டங்களை வகுக்கும் நோக்கத்துடனேயே இந்தப் புதிய முயற்சி பரீட்சித்துப் பார்க்கப்படுகிறதாம்.

ஏற்கனவே இருந்து வருகிற தூங்கும் வசதியுள்ள மூன்றாவது வகுப்புப் பெட்டிகள் விஷயத்தில் கட்டணம் வசூலிக்கப்படுவது போலவே இப்புதிய ரயில்பெட்டிகளிலும் 'பெர்த்' ஒன்றுக்கு ஒரு இரவுக்கு 3 ரூபாய் வீதம் கட்டணம் வசூலிக்கப்படுமாம்.

இந்தப் புதிய சேர்விஸ் பின்வரும் எட்டு ரயில்களில் ஆரம்பிக்கப்படும். சென்னை—திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்; சென்னை-பெங்களூர் மெயில்; டில்லி—லக்னோ எக்ஸ்பிரஸ்; ஹௌரா—பூரி எக்ஸ்பிரஸ்; மெஹ்ஸானா — பவநகர் எக்ஸ்பிரஸ் லக்னோ-காத்கோடம் எக்ஸ்பிரஸ்; டில்லி-பிக்கானீர் மெயில்.

இப்புதிய பெட்டிகள் ஒவ்வொன்றிலும், பிராட்கேஜ் வண்டியில் 24 பேருக்கும், மீட்டர் கேஜ் வண்டியில் 16 பேருக்கும் தூங்கும் வசதி இருக்குமாம்.

பிராட்கேஜ் பெட்டிகளில் ஒரு புதிய அம்சம் என்னவென்றால் கனமான சாமான்களைப் போடுவதற்குப் பிரத்தியேகமாய் ஒரு சாமான் அறை அதில் இருக்குமாம்.

புல்வாய் இரத்த வெறியை விட்டு விடவேண்டுமாம்

சிறுத்தையின் ஜீவ காருண்ய உபதேசம்

மதுரை, ஜூன் 6—

மதுரை நகரில் கடந்த ஜூன் 3-ந் தேதியன்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கம்யூனிஸ்டுத் தலைவர் தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள் 'தங்களிடையுள்ள கொள்கை வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்ள பலாத்கார முறைகளைக் கையாள வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டுகோள் வெளியிட்டார்' என்று சென்னை 5—6—57-ந் தேதிய தினமணி செய்தி தெரிவிக்கிறது.

மாவட்ட திட்ட குழுக்கள்

தி. மு. க.-விற்கு பிரதிநிதித்துவம் அளியுங்கள்

எம் எல். ஏ.-யின் யோசனை

நெல்லை, ஜூன் 6—

மாவட்ட திட்டக் குழுவில், காங்கிரசல்லாத திராவிட முன்னேற்றக் கழகம், பி. சோ. கட்சி போன்ற கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் தரப்படல் வேண்டும் என்று திருநெல்வேலி மாவட்ட திட்டக் குழுவில், கே. சட்டநாதக்கரையாளர் என்ற எம். எல். ஏ. யோசனை ஒன்று கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டரான ஏ. வி. லோகநாதன் தலைமை தாங்கியிருக்கிறார்.

மாவட்டத்தைச் சேர்ந்த வேறு எம். எம். ஏ.-க்களும் கலந்து கொண்டிருக்கின்றனர்.

அநியாய வரி...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பதினோரு ஆண்டுகள், பாராளுமன்றத்தைக்கூட்டாமல், கொடுங்கோலாட்சி புரிந்தான். Tonnage, Poundage) எனும் விசித்திர வரிகள் போட்டான். (Ship Money) - கப்பல் வரி என்ற வரியை அநியாயமாக கடற்கரை பிரதேசங்களோடு, மற்ற அனைவரையும் தரும்படி வற்புறுத்தினான்: ஹாம்டன் இதனை எதிர்த்தான். இந்த வழக்கு மூலம் வளர்ந்த வெறுப்பு சார்லஸ் மன்னன் தலையையே வெட்டி வீழ்த்திவிட்டது. அநியாய வரி விதிப்பு, அங்கே, தலையை துணித்திருக்கிறது. ஞாபகத்தில் வைக்கவேண்டும்!

எச்சரிக்கை! எச்சரிக்கை!!

இத்தகைய நிகழ்ச்சிகள் முன் நூற்றாண்டுகளில், உலக நாடுகளில் நடந்தன என்று எடுத்துக் காட்டுவதன் மூலம், இங்கேயும் நடைபெற வேண்டும் அத்தகைய நிகழ்ச்சிகள் என்று நாம் விரும்பவில்லை. ஆனால் எச்சரிக்கிறோம்!

புழுவுகூட, அதிக தொந்தரவு தந்தால், புலிபோல பாயும். இருட்டறையில் தள்ளப்பட்ட பூனைகூட 'பூட்டப்பட்ட கதவை தட்டும், புராண்டும், தன் வலிமை முழுவதும் காட்டி எதிர்க்கும். அதுபோலத்தான் மக்களும் பொங்கி எழுவார்கள். நீரில் சூடேற நேரம் பிடிக்கும். ஆனால் சூடேறி விட்டால், இறங்குவது, குறைவது என்பது மிகவும் காலம் பிடிக்கும் காரியமாகும். கல்லில் சூடு ஏறும் விரைவில் அதே வேகத்தில் குறைந்துவிடும். மக்கள் உள்ளம் பொங்கும் சமுத்திரம். அதில் தி. மு. க. எனும் சூரியன் சூடேற்றி வருகிறது. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ. சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

திண்டிவனம் :

9—5—57 திண்டிவனத்தில் மாலை 6 மணி அளவில் தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்குப் பாராட்டு கூட்டம் தோழர் ஆ. தங்கவேலு தலைமையில் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு கிராம உத்தியோகஸ்தர்கள் சார்பிலும், தையல் தொழிலாளர்கள் சார்பிலும் மாலைகளும், பல கிளைக் கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. பல தோழர்கள் பாராட்டிப் பேசினர். நன்றி தெரிவித்து தோழர் ஏ. கோவிந்தசாமி பேசியபின் தோழர் க. அன்பழகன் அவர்கள் நீண்ட விரிவுரை நிகழ்த்தினர். நகரச் செயலாளர் குமாரசாமி நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

கடலூர் :

10—5—57 கடலூர் டவுன் ஹாலில் மாலை 6-30 மணிக்கு தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் 'கைத்தறி வார விழா' தொடங்கிற்று. தோழர் க. அன்பழகன் அவர்கள் கைத்தறியின் எதிர்காலம் குறித்தும், அதை ஆதரிக்கவேண்டியதன் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர். துணைப் பதிவாளர் டி. ஏ. சுயம்பிரகாசம் நன்றி கூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

புதுக்கோட்டை :

11—5—57 காலை புதுக்கோட்டை (புகைவண்டி நிலையத்தில்) தோழர் க. அன்பழகன் அவர்களை பல தோழர்கள் வரவேற்று நகர விடுதிக்கு அழைத்துச் சென்றனர். மாலை பன்னீர் செல்வம் (குடந்தை) தலைமையில், தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு ஒரு தேனீர் விருந்து நகர விடுதியில் அளிக்கப்பட்டது. அதற்குநன்றி தெரிவித்துநமது இலட்சியத்திற்காககண்ணியத்தோடு கடமை ஆற்ற வேண்டிய அவசியத்தை எடுத்துக கூறினர்.

அன்று மாலை நச்சாந்துப்பட்டி உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழாவில் கலந்துகொள்ள அன்பழகன் அவர்கள் சென்றார்.

வரவேற்பு

இடையில் — நமணசமுத்திரம் தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. திருமயம், தாளம்பட்டி கிளைக் கழகங்கள்-மாணவர் நாகராசன் மற்றும் பலர் கைத்தறி ஆடைகள் அவருக்கு அணிவித்துப் பாராட்டினர்.

நச்சாந்துப்பட்டி :

உயர்நிலைப் பள்ளியில் திரு. கே. ஆர். எம். கே. எம். குமாரப்ப செட்டியார் தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு மாலை சூட்டி வரவேற்றார். விழா, புதுக்கோட்டை துணை தண்டல் நாயகம் தலைமையில் தொடங்கிற்று. "மாணவரின் கடமை" என்ற பொருள் பற்றி அரிய அறிவுரை வழங்கினர். தலைமை ஆசிரியர் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

புதுக்கோட்டை :

பின்னர், புதுக்கோட்டையில் இரவு 7-45 மணிக்கு நடைபெற்ற தமிழ் மன்ற ஆண்டு விழாவில் தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு பல வரவேற்புகள் அளிக்கப்பட்டன. நன்றி தெரிவித்து தோழர் அன்பழகன் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர்.

மாயவரம் :

12—5—57 மாயவரத்தில், ஆசிரியர் வேலாயுத மன்றத்தின் 6-வது ஆண்டு விழா காலை 10 - மணி அளவில் தோழர் 'காசிநாதன் தலைமையில் தொடங்கிற்று. 'குடவாசல் — கிருஷ்ணமூர்த்தி, சீர்காழி கோபாலகிருஷ்ணன் ஆகியோர் சிறிதுநேரம் பேசினர்கள். பின்னர் அன்பழகன் அவர்கள் கழகத் தோழர்களின் கடமைகள் குறித்த அரியதொரு அறிவுரை வழங்கினர்.

அன்று மாலை 6 மணிக்கு நகரப் பூங்காவில் செயலாளர் கிட்டப்பா தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கிற்று. பல கழகத் தோழர்கள் பேசிய பின்பு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேச எழுந்ததும் பலர் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் அணிவித்தனர். பின், 'தற்கால அரசியல் நிலை' குறித்து நீண்டதொரு விளக்கம் தந்தார் தோழர் அன்பழகன்.

கடலூர்-வண்டிப்பாளையம்

13—5—57 காலை, கடலூர் வண்டிப்பாளையத்தில் தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில், தோழர் கலியபெருமாள்-தோழியர் சிவகாமுசுந்தரி வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. பூ. கணேசன், பொறையார் ஜம்பு, மங்கலலூர் வெங்கடக்கிருஷ்ணன் முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் தோழர் க. அன்பகழன் அவர்கள் மணமக்களை வாழ்த்தி தமிழர் திருமண முறைபற்றி உரையாற்றினர்.

வைத்தினதபுரம் :

13—5—57 மாலை 6 மணிக்கு மாயூர வட்டம் வைத்தினதபுர தி. மு. கழகத்தின் சார்பில் பாராட்டு விழா பொதுக்கூட்டம் தொடங்கிற்று. இயக்கப் பாடல்கள் பாடியபின் தோழர் நாராயணசாமி கூட்டத்திற்கு தலைமை தாங்கினர். பல தோழர்கள் பேராசிரியரைப் பாராட்டி பேசினர்கள். தோழர் அன்பழகன் அவர்கள் பாராட்டிற்கு நன்றி தெரிவித்தும், சட்ட மன்றத்தில் தி. மு. கழாப் பணி குறித்தும் பேசினர். தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு வைத்தியனுதபுரம், நத்தம் தி. மு. கழகங்களும் படிப்பகங்களும், மன்றங்களும், தனிப்பட்டவர்கள் சார்பிலும் கைத்தறி துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

குருமானகுடி கோவிந்தசாமியின் பெண் மகவிற்கு அன்பழகன் "வெற்றிச் செல்வி" என்று பெயர் சூட்டினர். அதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

தேரழுந்தூர் :

14—5—57 தேரழுந்தூரில் அன்று மாலை 6½ மணி அளவில் கோ. சி. மணி தலைமையில் பாராட்டு விழா பொதுக் கூட்டம் தொடங்கிற்று. நத்தம் மணி, குடவாசல் கிருஷ்ணமூர்த்தி, அறிவுடைநம்பி ஆகியோர் சிறிது நேரம்பேசினர். பின்கழக வளர்ச்சி குறித்து நீண்ட விரிவுரை நிகழ்த்தினர். தோழர் அன்பழகன், அன்பழகன் அவர்களுக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

சிற்றிடையாநல்லூர் :

15—5—57 சிற்றிடையாநல்லூர் தி. மு. கழகத் துவக்கவிழா பொதுக் கூட்டம் மாலை 6 மணி அளவில் தொடங்கிற்று. கு. இராசமாணிக்கம் தலைமை தாங்கினர்.

ம. கோ. மணி, பொ. தருமன், கோ. சி. மணி முதலியவர்கள் சிறிது நேரம் பேசினர்கள். பின்னர் பேச எழுந்த அன்பழகன் அவர்களுக்கு பலர் மலர்மாலையும், கைத்தறி ஆடையும் அணிவித்தனர். கழகக் கிளைக்காக சொந்த நிலம் வாங்கியுள்ளதைப் பாராட்டி அங்கே கழகக் கொடியை உயர்த்தினர். கழகங்கள் தோற்றுவிக்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் கருத்துரை வழங்கினர்.

உட்கோட்டை :

16—5—57 மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் மாலை 6 மணி அளவில் உட்கோட்டையில் தொடங்கிற்று. தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தோழர் த. சந்திரகாசன் தலைமை தாங்கினர். அறிவுடைநம்பி, ம. கோ. மணி, வெள்ளியகுடி முருகேசன் மற்றும் பலர் பேசினர்கள். பின்னர், அன்பழகனுக்குப் பலர் கைத்தறி ஆடைகள் அணிவித்தனர். அன்பழகன் அவர்கள் தமிழ் மொழி தாழ்த்தப்படுவதையும், இந்தி எல்லாவகையிலும் நுழைக்கப்படுவதையும் கண்டித்து, 'திராவிட நாடு திராவிடருக்காக' வேண்டியதின் அவசியம் குறித்து விரிவுரையாற்றினர். நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

அநியாய வரி விதிப்புகள் புரட்சிக்கு வித்திட்டிருக்கின்றன

குவளை நீரில் படி உப்பு கரையாது

ஏழைகளால் இத்தனை வரிகளைச் சுமக்க முடியாது

வரலாறுகாட்டி எச்சரிக்கிறார் தில்லைவில்லாளன்

சிதம்பரம் வட்டத்தில் தோழர் தில்லை - வில்லாளன் அவர்கள் ஒரு வாரத்திற்குமதிகமாக சுற்றுப் பயணம் செய்தார். அவரது சுற்றுப் பயணத்தின்போது அவர் சிதம்பரத்தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

இரட்டையாட்சி

அரசியல் அறிவு ஓரளவு பெற்றவர்களுக்கு, நமக்கு இரண்டு ஆட்சிகள் உண்டு என்ற உண்மை தெரியும். ஒன்று மத்திய ஆட்சி; மற்றொன்று இராஜ்ய ஆட்சி. அதாவது நேரு ஆட்சி ஒன்று—அடுத்தது காமராஜ் ஆட்சி. இந்த இரண்டு ஆட்சியும் காங்கிரசாராலே நடத்தப்படுகிறது. முன்பு வெள்ளையர் காலத்தில் ஏற்பட்ட இரட்டையாட்சி இன்னும் மடியவில்லை—மறையவில்லை. வரி வசூலிக்க, முகம் தெரிந்த காமராசர் ஆட்சி—அதனை செலவிட அந்நியராம் நேருவின் ஆட்சி. இரண்டு பெண்டாட்டிக்காரனுன கண்ணன் பட்டதுன்பங்களை நாம் புராணத்திலே படிக்கிறோம். ஐந்து கணவனைப் பெற்ற பாஞ்சாலி கதையை பாரதத்தில் பார்க்கிறோம். ஆனால் நம் நாட்டு நிலையோ இரண்டு கணவனைப் பெற்ற ஒரு பெண்ணின் நிலை—விசித்திரம்-வெட்கம்-வேதனை !

'தூப்பரதண்டி' மந்திரி

இந்த இரண்டு சர்க்காரும் ஆண்டு தோறும் தாங்கள் பெற இருக்கும் வருமான இனங்களையும், செய்ய இருக்கும் செலவு இனங்களையும் முன் கூட்டியே, ஆளும் சபைகளின்முன் வைப்பார்கள். இதற்குதான் பட்ஜெட் என்பார்கள்.

சாதாரணமாக குடும்பங்களில் ரூ. 100 சம்பாதிக்கும் கணவன் உள்ள குடும்பத்த தலைவி, நல்லவளாக இருந்தால், அந்தத் தொகைக்குள்ளேயே குடும்ப செலவினங்களை அடக்கி விடுவாள்; மீதமும் பிடித்து, அஞ்சல் மனையில் கணக்கு வைத்து இருப்பாள். ஆடம்பரம் விரும்பும் பெண்ணாக இருந்தாலோ, மாதம் மாதம் கடன் பெறும் நிலையில் வரவிற்கு மீறிய செலவு செய்வாள். இதனது பெரிய உருவம் தான் ஒரு நாட்டின் பட்ஜெட்.

வரவிற்கு தகுந்த செலவு இருந்தால் அந்த பட்ஜெட்டை Balanced Budget என்பார்கள். வரவிற்கு மீறிய செலவு இருந்தால் Unbalanced Budget என்பார்கள்.

"இப்பொழுது மத்திய சர்க்காரின் பட்ஜெட் வெளியிடப்பட்டு விவாதம் நடைபெறுகிறது. இதில் வரவிற்கு மீறிய செலவு காட்டப்பட்டு, அதை சரிக்கட்ட ஏராளமான புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனை சமர்ப்பித்தவர் தான், தென்னகத்திலிருந்து அனுப்பப்பட்ட டி. டி. கே. ஆவார். வரவிற்கு தகுந்த செலவு செய்பவளை நல்ல பெண்மணி என்றும், வரவிற்கு மீறிய செலவு செய்பவளை அடங்காப் பிடாரி, தூப்பரதண்டி என்கிறோம் குடும்பத்தில். அரசியலில் 'தூப்பாதண்டி'யைப் பார்க்கிறோம், டி. டி. கே. உருவில் !

வரி விதிப்பது சரி. ஆனால்.........

"ஆட்சியாளருக்கு வரி விதிக்க உரிமை இருக்கிறது; மறுக்கவில்லை. மக்கள் வரி தர வேண்டியது அவர்கள் கடமை; ஒப்புக்கொள்கிறோம்.

"ஆனால் ஆட்சியாளருக்கு வரும் வருமான வகைகளில் வரி விதிப்பும் ஒன்று. இதனை அளவோடும், முறையோடும் விதிக்க வேண்டும். ஒரு குவளை தண்ணீரில் ஒரு படி உப்பு கரையாது. அதாவது கரைப்பு சக்தி அவ்வளவுதான்—அதுபோல, மக்கள் கொடுக்கும் சக்தியறிந்து வரி விதிக்கவேண்டும்.

"வரி விதிக்கும் பொருள்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தேவைப் பொருள், அதிக வசதிப் பொருள் என்று பிரிக்கலாம். நிலைமைக்குத் தக்கபடி இது மாறும். உப்பு, கஞ்சி குடிப்பவனுக்கு தேவை. சர்க்கரை, பால் குடிப்பவனுக்குத் தேவை. சைகிள், ஆறு மைல் தாண்டி மில்லுக்கு வேலை செய்யப்போகும் தொழிலாளிக்கு தேவை. கார், மாவட்டம் முழுவதும் சுற்றி பங்குதாரர் சேர்க்கும் பிரதிநிதிக்குத் தேவை. இப்படி தேவையும், அதிக வசதியும் மாறும். ஆனால் பொதுவாக தேவைப் பொருள்கள்மீது வரி விதித்தால் அது ஏழைகளையும், நடுத்தர வகுப்பினரையும்தான் பாதிக்கும். அதிக வசதிப் பொருள்கள்மீது விதிக்கும் வரி பணக்காரர்களை பாதிக்கும். ஆனால் இப்பொழுது விதித்துள்ள வரிகளோ, அன்றாடத் தேவையான தீப்பெட்டி, சர்க்கரை, கார்டு, கவர் போன்றவைகள்மீது. இவை ஏழை, நடுத்தர வகுப்பினரையே பாதிக்கும். கார் கட்டணம், ரயில் கட்டணம் போன்றவை உயர்வதால் அவர்களே பெரிதும் பாதிக்கப்படுவர்.

"இந்த வரி விதிப்பில் நேர்முக வரி விதிப்பு (Direct Tax) மறைமுக வரி விதிப்பு (In Direct Tax) என முறைகள் உண்டு. இவைகளில் இரண்டாவது வசூலிக்கவும் அதிக செலவு செய்யவேண்டும். பெரும்பாலும் பொருள்களை வாங்கும் ஏழை மக்களே தரவேண்டியிருக்கும்.

எல்லோரும் எதிர்க்கின்றனர் !

"இதனை எதிர்க்காத கட்சிகள் இல்லை—பெருந் தலைவர்கள் இல்லை - காங்கிரஸ் தலைவர்கள் உட்பட அனைவரும் எதிக்கின்றனர், ஆனால் தமிழகத்து விசித்திர தலைவர் ஒருவர் தவிர. முன்னாள் சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரி எதிர்த்தார். காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமன்நாராயணன் எதிர்த்துள்ளார் எனில் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் எதிர்ப்பு பற்றி கூறவும் வேண்டுமா?

"பாராளுமன்றஉறுப்பினர் ஒருவர் என் அறிவு, நிதி மந்திரியின் அறிவினைப் பாராட்டுகிறது; ஆனால் என் இதயம், ஏழை மக்கள் பக்கமே இருக்கிறது என்றார். இன்னொரு உறுப்பினர் இனி அடுத்துவரும் நிதி மந்திரிகள் புது வரிகள் விதிக்கமுடியாத அளவு, இந்த மந்திரியே எல்லா வரிகளையும் விதித்துவிட்டார் என்று கூறினர். பத்துப் பேர் நடுவில் அடக்கமாக இருப்பதாக நடிக்கும் மனைவி, வீட்டிற்குள் நுழைந்ததும் கணவனை எதிர்த்துரையாடுவதுபோல, காங்கிரஸ் எம். பி.-க்கள் பாராளுமன்றத்தில் அடக்கமாக இருந்துவிட்டு, தங்கள் கட்சி கூட்டத்தில் மிகவும் கடுமையாக எதிர்த்துப் பேசினர். அதன் பிறகு காப்பி, தேயிலை, மண்ணெண்ணெய், பேப்பர் வரிகளை எடுத்துவிடுவதாகவும், வருமான வரி விதிப்பில் சலுகைகள் தருவதாகவும் கூறியுள்ளார்.

வரிக் கழுதை சின்னம் !

"நமது நிதி மந்திரி தமது வரி விதிப்பிற்கு மக்கள் ஆதரவு உண்டு; ஏனெனில், தங்கள் ஐந்தாண்டுத் திட்டத்தை மக்கள் ஏற்றே காங்கிரசை வெற்றி பெற செயதுள்ளதாகச் சொல்கிறார். ஆகவே, பொதுச்செயலாளர் அறிக்கைப்படி, தமது பதவியை ராஜினமா செய்துவிட்டு மறு தேர்தலில் நிற்கட்டும். புது வரி விதிப்பிற்கு மக்கள் ஆதரவு என்ன என்பது புரிந்துவிடும். இந்தத் தடவை காங்கிரசின் காளை மாடு பொருத்தமில்லை. வரிக் கழுதைதான் பொருத்தமான சின்னம்.

அதிக வரி தலையை இழக்கவைத்தது

"பிரெஞ்சுப் புரட்சி ஏற்படக் காரணமே, மக்கள் சக்திக்கு மீறிய அநியாய வரி—அதிக வரி—அவசியமற்ற வரிகளை விதித்தார்கள். அதாவது நில வருமானத்தில் இவ்வளவு பாகம்; வீட்டு வாடகை வருமானத்தில் இவ்வளவு பாகம்; மனித வருமானத்தில் இவ்வளவு பங்கு என ஆட்சியாளர் வாங்கிக்கொள்வர்.

"சில சாமான்களை ஆட்சியாளரே விற்பார்கள். காபேல் என்பது உப்பு வரியாகும். அதாவது சர்க்கார் விற்கும் உப்பை ஒவ்வொருவரும் குறைந்தது இவ்வளவு வாங்கவேண்டும் என்று சொல்கிற அளவை வாங்கியே தீரவேண்டும் என்றும் Corvee என்று சொல்லப்படும் கட்டாய உழைப்பு வாங்கப்பட்டது. ஏழை விவசாயிகளிடம் திடீரென சர்க்கார் சிப்பந்திகள் கிராமத்தினரை பாதை அமைக்க வளைத்து இழுத்து செல்வர். வேலை செய்யவேண்டும் கூலியின்றி-உணவின்றி. சில வரி வசூலை குத்தகைக்கே விட்டுவிடும் அரசாங்கம். வரி வசூலிக்கும் அதிகாரிகள் மட்டும் 2½ இலட்சம் பேர். இவர்களுக்கு சுடவும் அதிகாரம் உண்டு. வரி கொடாதவர் வீடுகளைக்கூட இடித்து தூண்கள், உத்தரங்களைக்கூட ஏலமிடுவர். ஒரு விவசாயின் வருமானத்தில் 55 சதவிகிதம் வரியாக வசூலிக்கப்பட்டது.

"இந்த வரிக் கொடுமைதான் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்தாயிற்று. பாஸ்ட்டிலி சிறை பொடிப் பொடியாயிற்று. வெட்டாயுதத்தில் லூயி மன்னன் குடும்பத்தினரும், அவனை ஆதரித்த பிரபுக்கள் கூட்டமும் வெட்டிக் குவிக்கப்பட்டனர். அதிக வரி விதிப்பு அங்கே, தலைகளை இழக்கச் செய்திருக்கிறது. மறக்கவேண்டாம் !

"இங்கிலாந்தில் சார்லஸ் இப்படித்தான் வென்ட் வொர்த், லாடு எனும் இருவரின் துணைகொண்டு

(2-ம் பக்கம் பார்க்க)

கம்யூனிஸ்டு சர்க்காரின் முதல் வரவு-செலவு திட்டம்

ரூ. 7 இலட்சம்வரை உபரி காட்டப்படுகிறது

விவசாயச் சொத்துக்களுக்கு வரி விதிப்பு

திருவனந்தபுரம், ஜூன் 7—

கேரள கம்யூனிஸ்டு சர்க்கார் இன்று தனது முதல் வரவு-செலவு திட்டத்தை மாநில சட்டசபையில் தாக்கல் செய்துள்ளது.

1957—58-ம் ஆண்டில் உத்தேச வருமானம் ரூ. 2790·32 இலட்சமாகவும் உத்தேச செலவு ரூ. 3015·56 இலட்சமாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே, துண்டுவிழும் தொகை ரூ. 225·24 இலட்சம் ஆகும்.

ஆனல் இந்தத் தொகை புதிய வரிவிதிப்புகள் மூலம் சரிக்கட்டப் படுகிறது.

புதிய வரி விதிப்புகள் மூலம் ரூ. 232·57 இலட்சம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் உபரித் தொகை ரூ. 7·33 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வரி விதிப்புகள்

புதிய வரி விதிப்புகள் பற்றிய விவரங்களை 'பட்ஜெட்' தாக்கல் செய்த நிதி மந்திரி அச்சுத மேனன் விளக்கியுள்ளார்.

டில்லி சர்க்கார் விதித்துள்ள சொத்து வரி விதிப்படி, மாநில சர்க்கார், விவசாயச் சொத்துக்களுக்கு வரி விதிப்பர்.

மத்திய சர்க்கார் விவசாயச் சொத்துக்களல்லாத இதர சொத்துக்களுக்கு வரி விதித்திருப்பதால் விவசாயச் சொத்துக்களுக்கு விலக்களிக்க வேண்டும் என்ற நியாயமே இல்லை என்று நிதி மந்திரி கூறியிருக்கிறார். இந்தச் சொத்துக்களுக்கு வரி விதிப்பதின் மூலம் ரூ. 16 இலட்சம் ஆண்டுதோறும் கிடைக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ரூ. 25,000 முதல் ரூ. ஒரு இலட்சம் வரை விவசாய வருமானமுடைய கம்பெனிகளுக்கும் ஒரு அணு முதல் நாலணு வரை உபரி அமிதவரி விதிக்கப்படும்; இதன் மூலம் ஆண்டுதோறும் ரூ. 65 இலட்சம் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு-கொச்சி மற்றும் மலபார் பிரதேசங்களில் நில வரி முறைகளை ஒரு வழிப்படுத்துவதின் மூலமும், மலபாரிலும் அடிப்படை வரி, விவசாய வருமான வரி ஆகிய வரி விதிப்புகளை அமுல் செய்வதின் மூலமும் ரூ. 98·61 இலட்சம் கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

'பட்ஜெட்' ரகசியம் அம்பலமானது பற்றி

வரவு செலவுத் திட்ட விவரங்கள் பத்திரிகை ஒன்றில் வெளியானது பற்றி நிதிமந்திரி அச்சுத மேனன் குறிப்பிடுகையில் 'முக்கிய விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை' என்றும், எப்படியாவது பட்ஜெட் விபரங்களை வெளிக் கொணருவது என்று சிலர் முயற்சித்திருக்க வேண்டுமெனச் சந்தேகிக்கப்படுவதாகவும், இதற்கு அரசியல் அல்லது வேறு காரணங்களிலிருக்கலாம் என்றும், புரட்சி சோஷலிஸ்டு கட்சி நடத்திய தொழிற்சங்கத்தைச் சேர்ந்த பல தொழிலாளர்கள், சர்க்கார் அச்சகத்தின் புத்தகப் பிரிவில் வேலை செய்கிறார்கள் என்பது போலீஸ் விசாரணையின்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தக்கபடி தண்டிக்கப்படுவார்கள் என்பது தான் உறுதி கூறுவதாகவும் அச்சுதமேனன் தெரிவித்திருக்கிறார்.

இரவு ரயில்கள் ஓடாது

விபத்துகள் தடுப்பு நடவடிக்கை

ஐதராபாத், ஜூன் 7—

1954—56 ஆண்டுகளில் மத்திய இரயில்வேயில் செகந்தராபாத் பகுதியில் ஜான்கான், மஹபூப் நகர் பகுதிகளில் இரவு நேரத்தில் இரண்டு விபத்துகள் ஏற்பட்டு 260-க்கு மேற்பட்டவர்கள் இறந்தது தெரிந்ததே.

இந்த விபத்துகளின் காரணமாக எதிர்காலத்தில் பிரயாணிகளின் நன்மையைக் கருதி, முன் எச்சரிக்கையாக இந்த பகுதிகளில் இரவு நேரங்களில் இரயில்கள் ஓடுவதை நிறுத்தியுள்ளனர். விபத்துகள் நேரிடாதபடி தடுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

இந்த பகுதியில் இரவு நேரத்தில் மொத்தம் ஆறு வண்டிகள் நேற்று முதல் ரத்து செய்யப்பட்டுள்ளன.

செடியின் தழைகளையே பறித்து எருவாக இடுவதா?

புதுவரிகளைக் கண்டித்து ஆச்சாரியார்

சென்னை, ஜூன் 8—

"மத்திய அரசாங்க 'பட்ஜெட்'டைப் போலவே, மாநில அரசாங்கங்களின் 'பட்ஜெட்'டுகளும் புதிய வரிகளை புகுத்துவதாக அமையும். மாநில அரசாங்கத்தின் புதிய வரிவிதிப்புகளின் நியாய அநியாயங்களை ஆராய்வதில் மக்கள் அதிக நேரம் செலவிட்டு அக்கறையுடன் ஆராயவேண்டியிருக்கும்,"

—என்று, தியாகராயநகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பேசுகையில் அவர், 'இன்று நாட்டில் உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளதை காண்கிறோம். வரிவிதிப்பு விஷயம் இன்னும் யோசனையில் இருக்கும்போதே இந்த நிலை; வரி விதிப்பின் விளைவே இத்தகைய கொள்ளைக்கு இடம் தருவதுதான்' என்றும் குறிப்பிட்டார்.

"புதிய 'பட்ஜெட்'டினல் நாட்டிலே அதிகாரிகளின் தொல்லையும், இலஞ்சமும், ஊழலும், கெடுபிடியும்தான் அதிகரிக்கும். இந்த 'பட்ஜெட்'டில் அதிக பணம் சேகரித்துவிட வேண்டும் என்ற எண்ணமே காணப்படுகிறது. வரி கொடுக்க மறுத்துள்ள ஒரு சிலருக்காக இன்று எல்லோரையும் முற்றுகையிட்டுள்ளனர்.

"எந்த திட்டங்களை நிறைவேற்ற வரிகள் போடப்பட்டுள்ளதோ அந்தத் திட்டங்களின் நிர்மாணச் செலவை இந்த வரிகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

"திட்டங்களுக்குத் தேவைப்படும் உருக்கு, சிமெண்டு போன்ற சாமான்களின் விலை உயர்வு ஒருபுறம், நாட்டில் ஊதிய உயர்வு கோரும் தொழிலாளர் ஒரு புறம்; ஆக நிலைமை மோசமடையும். இது எப்படியிருக்கிறதென்றால் ஒரு செடியின் வளர்ச்சிக்கு பச்சை உரம் நல்லது என்பதற்காக அந்த செடியின் தழைகளையே பறித்து எருவாக இடுவதுபோல இருக்கிறது"

என்றும், ஆச்சாரியார் புதிய வரி விதிப்புகளைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

குறள் அறிவு மன்றம் திறப்புவிழா

9—6—57 மாலை 6-மணிக்கு சென்னை — தொண்டையார்பேட்டை, வரதராச பெருமாள் கோவில் தெருவில், 'குறள் அறிவு மன்றம்—அண்ணு படிப்பகம்' திறப்புவிழா நடைபெறும்; தோழியர் அலமேலு அப்பாதுரையார், தோழர்கள் மா. இளஞ்செழியன், எஸ். எஸ். தென்னரசு, புலவர் ஐ. நடேசன், நஜயராசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பீமண்ணன் பேட்டையில் அண்ணு

வள்ளுவர் கல்விக்கழக இரண்டாம் ஆண்டுவிழா

சென்னை—46-வது வட்டம் பீமண்ணன்பேட்டை வள்ளுவர் கல்விக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழா 9—6—57 ஞாயிறு மாலை 6 மணிக்கு பீமண்ணன் பேட்டை அருகிலுள்ள திடலில் தோழர் பொன். கு. கோதண்டபாணி தலைமையில் நடைபெறும்.

அண்ணு, தோழர் ஆர். எஸ். பாண்டியன், தோழியர் எஸ். பி. சற்குணம் ஆகியோர் பேசுவர்.

மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சியும் உண்டு.

வெள்ளிவிழா

9—6—57 மாலை 6-மணிக்கு சென்னை—மூலக்கடை கிராம பொதுநல மன்றத்தின் 'வெள்ளி விழா' மூலக்கடையில் தோழர் என்றி அவர்கள் தலைமையில் நடைபெறும்; திரு கா. அப்பாதுரையார், டாக்டர் கிருட்டிணசாமி தலைவாணர் என். எஸ் கிருட்டிணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னையில் புகைப்பட கண்காட்சி

காதலர் சந்தித்துப் பிரியும் உருக்கமான காட்சி!

பிரெஞ்சு நாட்டு மணப் பெண் புது இன்பத்தை எண்ணி ஊஞ்சலில் பூரிக்கும் காட்சி!

ஒரு டச்சு மாது தன் செல்வக் குழந்தைக்கு பாலமூட்டும் இயற்கை அன்பின் காட்சி!

இவையும் இன்னும் பல அரிய புகைப்படங்களும் காண வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது சென்னையில்.

20,00,000-க்கும் அதிகமான படங்கள், 68 நாடுகளில் இருந்து வந்தனவாம். அவைகளில் நல்லவை என தேர்ந்தெடுக்கப்பட்ட 500 புகைப்படங்கள்மட்டுமே கண்காட்சியில் வைக்கப்படுமாம். இந்தக் காட்சிக்கு 'மானிடர் குடும்பம்' என்று பெயரிடப்பட்டுள்ளதாம். ஜூன் 10 முதல் ஜூலை 24-ம் தேதிவரை காட்சி நடைபெறுமாம்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜியோ டெசிக்ஸ் கம்பெனியின் சிட்டீ நிபுணர் பக்மின்ஸ்டர் உருவாக்கியுள்ள ஒரு புதுமாத கூடாரத்தில் இந்தக் கண்காட்சி நடைபெறுமாம். இந்தக் கண்காட்சி இந்தியாவில் சென்னையில்தான் முதன் முதல் நடைபெறுகிறது.

தேசுமுகப்பேட்டை டக்கு (திருக்கழுக்குன்றம்) அண்ணு வருகை

13—6—57 அன்று மாலை 6 மணிக்கு திருக்கழுக்குன்றத்தில் தேசுமுகப்பேட்டைதி.மு. கழகச் சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்.

கழகக் கூட்டங்கள்

★

கடைமீண்டார்கோட்டை

9—6—57 மாலை 5-30 மணிக்கு தி. மு. கழக 1-ம் ஆண்டு விழா

தலைவர் :
இரா. இராசகோபால்

பேசுவோர் :
அன்பில்-தருமலிங்கம்
நெடுமாறன்
முத்துப்பேட்டை தருமலிங்கம்
முக. மீரா

(மாலை 5-மணிக்கு வாண்டையார் னிருப்பு ஊராட்சி மன்ற கட்டிடத்திலிருந்து ஓர் ஊர்வலம் புறப்படும்.)

★

சென்னை-38வது வட்டம்

லாட் கோவிந்ததாஸ் நகர் (மிட்லண்ட் அருகில்)

10—6—57 மாலை 6 மணிக்கு தி. மு. க. ஆண்டு விழா

தலைவர் :
பி. பாலசுப்பிரமணியம்

பேசுவோர் :
அண்ணு
ஆசைத்தம்பி
அருண்மொழிவில்வம்

புது வரிகள் கண்டனக் கூட்டம்

10—6—57 மாலை 6-மணிக்கு முத்தமிழ் முன்னேற்ற மன்றச் சார்பில் சென்னை — இராயபேட்டை அம்மன்கோவில் திடலில் தோழர் மோ. கண்ணபிரான் தலைமையில் புதுவரிகள் கண்டனக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., கண்ணதாசன், நடிகர் என். எஸ். நாராயணன், தி. செல்வமணி ஆகியோர் பேசுவர்.

திரைப்படக் காட்சி ஒத்திவைப்பு

9—6—57 காலை சென்னை—சித்ரா திரையரங்கில், சென்னை —சிந்தாதிரிப்பேட்டை வள்ளுவர் மன்ற இரவு பள்ளி நிதிக்காக நடைபெறவிருந்த 'கள்வனின் காதலி' திரைப்படக் காட்சி சில முக்கிய காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது; தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று மேற்படி மன்றச் செயலாளர் வி. கோ. முனுசாமி அறிவிக்கிறார்.

சினிமா துறையில் புதிய சங்கடம்

தாராள இறக்குமதிக்குத் தடை!

புதுடில்லி, ஜூன் 7—

சினிமாப் படங்களை தயாரிப்புக்கான கச்சா பிலிம் தாராள இறக்குமதியின் பட்டியலில் இருந்து நீங்கியுள்ளது.

இனி கச்சா பிலிம்கள் இறக்குமதி கோட்டாமுறையில் மட்டுமே அனுமதிக்கப்படுமாம்.

திரைப்படத் தயாரிப்பாளர் படம் உருவாவதற்கு முன்னரே நிறைய கச்சா பிலிம் நாசப்படுத்துகின்றனராம்.

மேலும் படத்தின் நீளத்தையும் குறைத்துவிட வேண்டும் என்றும் 10,000 அடிக்குமேல் அனுமதிக்கப்படக் கூடாது என்றும் வர்த்தக அமைச்சர் தேசாய் இறக்குமதி ஆலோசனைக் குழுவில் தெரிவித்துள்ளாராம்.

திருமணங்கள்

★

9—6—57 காலை 9-மணியளவில் மூக்கனூர் தோழர் கண்ணுசாமி—தோழியர் பதுமா வாழ்க்கை ஒப்பந்தவிழா தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், க. அறிவழகன், செ. வரதராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 8.30 மணிக்கு மூலக்கடையடுத்த கொடுங்கையூர் 4-83 எண்ணுள்ள இல்லத்தில் தோழர் தசரதன்—தோழியர் பூலோக அரம்பை வாழ்க்கை ஒப்பந்தவிழா, புலவர் கி. தியாகராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர் மு. மா. முத்து மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 8-மணிக்கு சென்னை—47-வதுவட்ட தோழர் சோமுலு—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்தவிழா, தோழர் எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் டி. நாராயணன், புலவர் நன்னன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9-மணிக்கு தோழர் கு. கோவிந்தன்—தோழியர் நா. யசோதரை வாழ்க்கை ஒப்பந்தவிழா, தோழர் ஏ. கெங்காதரன் அவர்கள் தலைமையில் செங்குன்றத்தில் நடைபெறும்; தோழர்கள் மா. இளஞ்செழியன், இ. எஸ். மணி, ச. மாணிக்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 7-மணிக்கு சிவகாசி தோழர் மாசிலாமணி—தோழியர்சோமத்தாய் வாழ்க்கை ஒப்பந்தவிழா, நகரமன்ற உறுப்பினர் தோழர் ஏ. சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர் வே. கருணாகரன் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9 மணிக்கு கோவை—பேரூர் வில்வாத்திரி திரையரங்கில், தோழர் சி. கே. வாசன்—தோழியர் கண்ணம்மா வாழ்க்கை ஒப்பந்த விழா, புலவர் சா. மருதவாணர் அவர்கள் தலைமையிலும் போசரியார் க. அன்புமுகன் எம். எல். ஏ. அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

மணமக்களுக்குப் பாராட்டு

9—6—57 மாலை 4-மணிக்கு சென்னை—47-வதுவட்ட தி. மு. கழகத்தின் சார்பில், சைதாப்பேட்டை சேசா முதலி தெரு 20-ம் எண்ணுள்ள இல்லத்தில், வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்ட தோழர் சோமு—தோழியர் சரோசா ஆகியோரைப் பாராட்டி, தோழர் ஜி. அண்ணமலை தலைமையில் ஓர் கூட்டம் நடைபெறும்; வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருட்டிணன், நடிகமணி டி. வி. நாராயணசாமி முதலியோர் பாராட்டுரை வழங்குவர்.

சென்னை 37-வதுவட்ட தி. மு. கழக செயற்குழுஉறுப்பினர்கட்கு:

9—6—57 பிற்பகல் 2-மணிக்கு இராயப்பேட்டை கழகப் பணிமனையில் மேற்படி செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது பொதுக்கூட்டம் நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.